# நற்கொடை.

---

## கிறிஸ்து மெய்யான தேவன்.

சத்தியவேதம் முதற் தொடங்கி கடைசிவரைக்கும் கிறிஸ்துவைப்பற்றிப் பேசுகின்றது. எங்கள் விசுவாசத்தின் அஸ்திபாரமாகிய இந்த நல்ல புத்தகம் கிறிஸ்துநாதருடைய மேன்மையைக் குறித்தும், அவருடைய கிரியைகளைக் குறித்தும், பலவாறாய் உரைக்கின்றது. அது அவர் மனுருபமெடுத்தாரெனச் சொல்லுகிறதுபோலவே அவர் தேவன் என்றும் வெளிப்படுத்துகின்றது. நமது நித்திய ரட்சிப்பும் இவ்விசுவாசத்திலேயே நிலைகொண்டிருக்கிறது. கிறிஸ்துவின் தெய்வீகத்தை உருபிக்கும் பிற உதாரணங்கள் பல இருந்தும் அவர் தேவனென்று சந்தேகமின்றிப் போதிக்கிற வேதவாக்கியங்களினால் அத்தாட்சிப்படுத்துவது விசேஷமாயிருக்கும்.

I. கிறிஸ்து தேவனென்று வேதம் சந்தேகமின்றிச் சாதிக்கின்றது.

1. அவர் தேவனாகத் தொழுதுகொள்ளப்படுகிறார் "தேவதூதர்கள் யாவரும் அவரைத் தொழுதுகொள்ளக்கடவர்கள்." (எபி. 1. 6) என்று சொல்லியிருக்கிறது. அவர் உற்பவித்தபோது கீழ்த்திசையில் இருந்துவந்த சாஸ்திரிகளும் அவர் உயிர்த்தெழுந்தபின் அப்போஸ்தலர்களும் அவரைத் தொழுதுகொண்டார்கள். அப்போஸ்தலரின் நடபடிகளிலும் அவர்கள் எழுதிய நிருபங்களிலும், இயேசு பரமண்டலத்துக்கு எழுந்தபின்னும், அவரை வணங்கினார்கள் என்று வாசிக்கிறோம். "இருபத்து நான்கு மூப்பர்களும் சிங்காசனத்தில் வீற்றிருக்கிறவருக்கு முன்பாக வணக்கமாய் விழுந்து அவரைத் தொழுது கொண்டார்கள்." (வெளி. 4. 10). பரிசுத்தவான்களும் தேவதூதர்களும் இவ்வித வணக்கத்தைத் தாங்கள் ஏற்றுக்கொள்ளாமல் தள்ளித் தேவனை மாத்திரம் வணங்கும்படி சொன்னதாய் வாசிக்கிறோம்.

2வது. தேவனுக்கு மாத்திரம் உரிய இலட்சணங்கள் அவருக்குப் பாவிக்கப்பட்டிருக்கின்றன.

(க). கிறிஸ்து நித்தியரும் மாறாதவருமாய் இருக்கிறார். "ஆதியிலே வார்த்தை இருந்தது, அவ்வார்த்தைதேவனாய்

இருந்தது." (யோவா. 1. 1) என்றும், "நீரோ மாறாதவராய் இருக்கிறீர் உம்முடைய ஆண்டுகள் முடிந்துபோவதில்லை" என்றும் (எபி. 1. 12), "யேசுக்கிறிஸ்து நேற்றும், இன்றும், என்றும் மாறாதவராய் இருக்கிறார்" (எபி. 13. 8) என்றும் "நான் அல்பாவும், ஓமேகாவும், ஆதியும், அந்தமும் முந்தினவரும் பிந்தினவருமாய் இருக்கிறேன்" (வெளி. 22 13) என்றும் வேதம் சாதிக்கின்றது.

(உ.) அவர் சர்வஞானம் உள்ளவர். மனுஷருடைய இருதய சிந்தனைகளை எல்லாம் யேசு அறிந்தவர் என்று சுவிசேஷங்கள் கூறுகின்றது. "அவருக்குள் (யேசு) ஞானம், அறிவு, என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கி இருக்கின்றன. (கொலோ. 2. 3) "அவரே உள்ளிந்திரியங்களையும், இருதயங்களையும், ஆராய்கிறவரென்று எல்லாச்சபைகளும், அறிந்துகொள்ளும்" (வெளி. 3. 23.)

(ங) யேசு சர்வ வியாபகர். "இதோ உலகத்தின் முடிவுபரியந்தம் சகலநாட்களிலும், நானுங்களுடனே இருக்கிறேன்." (மத். 28. 20.) என்றும், "இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்திலே எங்கே கூடி இருக்கிறார்களோ அங்கே அவர்கள் நடுவில் இருக்கிறேன்" (மத். 18. 20) என்றும் "பரலோகத்திலிருந்திறங்கினவரும், பரலோகத்தில் இருக்கிறவருமான மனுஷ குமாரனே அல்லாமல் பரலோகத்துக்கு ஏறினவன் ஒருவனுமில்லை" (யோவா. 3. 13) என்றும் யேசு தாமே சொல்லி இருக்கிறார்.

3 வது. யேசு தேவ வல்லமை உடையவர்.

(க) தமது தூதர்களை அனுப்பும் வல்லமை அவருக்குண்டு. (மத். 13. 41.)

(உ) பாவங்களை மன்னிக்கும் அதிகாரம் அவருக்குண்டு. திமிர்வாதக்காரனுக்கும், தம்முடைய பாதங்களைக் கழுவினஸ்திரிக்கும், பாவங்களை அவர் மன்னித்தார்.

(ங) உலகத்தை நியாயந்தீர்க்கும் தேவ தத்துவம் அவருக்கு உண்டு, என்பது "சரீரத்தில் அவன் அவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்குமுன்பாக வெளிப்படவேண்டும்" (2 கொரி. 5.10.) என்றும் "மனுஷ குமாரன் தமது மகிமை பொருந்தினவராய் சகல பரிசுத்த தூதரோடுங் கூட வரும்போது

தமதுமகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பார் (மத். 25-31.) என்றும் சொல்லப்பட்டிருப்பதினால் விளங்குகின்றது.

(௪.) சிருட்டிப்பும், பாதுகாத்தலுமாகிய தொழில்கள் யேசுவுக்குரியவைகள். "சகலமுங் குமாரன் மூலமாய்உண்டாயிற்று, உண்டானதொன்றும் அவராலேயல்லாமலுண்டாகவில்லை." (யோவா. 1. 3) "சகலமும் குமாரனைக்கொண்டும், அவருக்கென்றும் சிருட்டிக்கப்பட்டது. அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர் எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது." (கொலோ 1. 16. 17.)

(௫.) வானத்திலும் பூமியிலுமுள்ள சகல அதிகாரமும் அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது" (மத். 28.18.) அவர் அற்புதங்களைத் தமது நாமத்தினாலே செய்தார். அதிகாரத்தோடு பொல்லாத ஆவிகளைத் துரத்தினார்.

II. விவிலியநூலில், தேவ நாமங்கள் கிறிஸ்துவுக்குப் பாவிக்கப்பட்டிருக்கின்றன.

யெகோவாவுக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள் அவாந்தரவெளியிலே நம்முடைய தேவனுக்குப் பாதையைச செவ்வைப்பண்ணுங்கள். வனாந்தரத்திலே கூப்பிடுகிற சத்தமுண்டாயிருக்கிறது" (ஏசா 40.3.5) என்று ஏசாயா சொன்ன வசனத்தில் சத்தமென்று குறிக்கப்பட்டவர் யோவான் ஸ்நானன் எனச் சுவிசேஷகர் எழுதுவதினால், யெகோவாவென்றும், தேவனென்றும் தீர்க்கதரிசி கிறிஸ்துவையே அழைக்கிறார் என விளங்குகிறது. ஏசாயாத் தீர்க்கதரிசி "இதோ ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்" (ஏசா 7.14) என்று கிறிஸ்துவைக்குறித்துச்சொல்லித்தேவன் நம்முடனே இருக்கிறார் என்றர்த்தங்கொள்ளும் இம்மானுவேலென அவருக்கு நாமஞ் சூட்டி அப்பாலகன் "அதிசயமானவர் ஆலோசனைக்கர்த்தர் வல்லமையுள்ள தேவன்" என அவரை அழைக்கிறார். சகரியா மேய்ப்பனென்றும், எரேமியா நீதியுள்ள கிளையென்றும் நீதியாயிருக்கிறயெகோவாவென்றும் யேசுவை அழைக்கிறார்கள்.

புதிய ஏற்பாட்டை நாம் பார்க்கும்போதும் தேவ நாமங்கள் கிறிஸ்துவுக்குப் பாவிக்கப்பட்டிருக்கிறதைக் காண்கிறோம். கிறிஸ்துவாகிய "அந்த வார்த்தை மாம்சமாகிக் கிருபையினாலும் சத்தியத்தினாலும்நிறைந்தவராய் ந

மக்குள்ளே வாசம்பண்ணினார். அவருடைய மகிமையைக் கண்டோம். அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கேற்ற மகிமையாகவே யிருந்தது." (யோவா. 1: 14.) என்று யோவான் சுவிசேஷகன் எழுதுகிறார். அவர் உயிர்த்தெழுந்தபின் தோமா அவரை "என் ஆண்டவரே என்தேவனே" என்று அழைத்தான். (யோவா. 20· 28.) இவர் என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்ட சர்வத்துக்கும் மேலான தேவன்" (ரோமர் 9: 5.) என்று சொல்லியிருப்பதினால் கிறிஸ்து மாம்சத்தின்படி யூதனாயினும் அவர் தேவத்தன்மை உடையவராயிருக்கிறாரென்றும், அதினால் என்றென்றும் தோத்திரிக்கப்படத்தக்கவரென்றும் புலப்படுகின்றது. "தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறதென்றும்" (கொலோ. 2. 8.) பிதாவாகிய தேவன் "குமாரனை நோக்கி தேவனே உம்முடைய சிங்காசனம் என்றென்றைக்கும் உள்ளது." (எபி. 1: 8.) எனச் சொன்னாரென்றும் எழுதப்பட்டிருப்பதால் குமாரனாகிய கிறிஸ்து நிச்சயமாய்த் தேவனாயிருக்கிறாரென்று அறியலாம். பேதுரு "எங்கள் கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்து" என்றும், யூதா "ஒன்றான ஆண்டவரான தேவனையும் நம்முடைய கர்த்தாகிய யேசுக்கிறிஸ்துவையு" மென்றும் சொல்லியிருக்கிறார்கள்.

மேற்சொல்லப்பட்ட வாக்கியங்களினால் கிறிஸ்து மெய்யான தேவனென்று தெளிவாய் உரூபிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் அதிக பயபத்தியுடனும் வணக்கத்துடனும் அவரது தெய்வீகத்தன்மையை மதிக்கவும், அவர் தமது சகல தெய்வீக மகிமைகளையும் வெறுத்துவிட்டு எங்கள் நிமித்தம் மனுஷ சாயலைத் தரித்துக்கொண்டதற்காக நாம் அதிக நன்றியறிதலைக் காண்பிக்கவும், எங்களை இரட்சிக்கப் பிரியமுள்ளவரும், வல்லமையுள்ளவருமாகிய அவரில் உறுதியாய் நம்பவும் செபத்தின்மூலமாய் நிச்சயத்தோடு அவர் வல்லமையில் சார்ந்துகொள்ளவும் எங்கள் சகல பாவங்களுக்காகவும் அவருண்டாக்கின ஈடேற்றத்தின் மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருக்கவும் வேண்டும். இவ்வளவு பூரணமுள்ள இரட்சகரை அசட்டைபண்ணலாமா?

Strong and Asbury, Printers: Manipay, 1890.—Ed. 3000.